**Volume : 4, Issue : 1, May 2020** **Pg. No. 24 - 29**



புதிய அவையம்
காலாண்டு மின்னிதழ்
ISSN : 2456-821X

# *தலித் கவிதைகளில் பண்பாட்டு விடுதலை கூறுகள்*

*ச. பிரகாசம்,*

*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை,*
*அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி,*
*வடசென்னிமலை, ஆத்தூர்,*
*சேலம் மாவட்டம்.*

==================================================================

## *முன்னுரை*

*Culture என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகக் கலாச்சாரம், பண்பாடு என்ற இரண்டு சொற்கள் தமிழில் வழங்கி வருகின்றன. 'பண்பாடு' ஒரு தனி நபர் தனது சமூகத்தினிடமிருந்து கற்றறியும் நம்பிக்கைகள், வழக்கங்கள், கலை நெறிகள், உணவுப்பழக்க வழக்கங்கள், கைவினைகள் போன்றவற்றின் ஒட்டுமொத்தத் தொகுப்பாகும்.*

## *பண்பாட்டு விடுதலைக் கூறுகள்*

*" ஒரு பண்பாட்டைச் சேர்ந்தோரின் வாழ்வியலுக்கும், செயல்களுக்கும் நடத்தை முறைக்கும் எவை எவை அவசியமென்று கருதப்படுகிறதோ அவையே அப்பண்பாட்டினரின் விழுமியங்கள் ஆகும். மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து வாழ முற்படும்போது எவை எவையெல்லாம் இன்றியமையாதது எனக் கருதப்படுகிறதோ இவை பண்பாட்டு விழுமியங்கள்*

எனப்படும் ". இன்றைய பண்பாட்பை பண்பாட்டு விழுமியமாக மாற்றும் நோக்கம் கொண்டதே தலித்தியப் படைப்பின் நோக்கம் எனலாம் . தலித்தியக் கவிதைகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் பண்பாடு வெளிப்படுகிறது . உழைப்பை முதன்மையாகக் கொண்டதே தலித் மக்களின் பண்பாடாகும் . மலம் அள்ளும் வேலையை செய்யும் மக்கள் , ஊரைச் துப்புரவு செய்வதும் , மேட்டிமைச் சமூகத்திடம் மீதம் இருக்கும் உணவுப்பொருளை வாங்கி உண்பதும் எனத் தாழ்ந்த வாழ்வு நிலையையும் , கல்வி குறித்தும் அவரவரும் கல்வி கற்றுக் குடும்பத் தொழிலை மாற்றுவது குறித்தும் ஆன மாற்றுப் பண்பாட்டைச் சிந்திக்காமல் நாம் உழைக்கப் பிறந்தவர்கள் உழைத்துக்கொண்டே இருந்தால்எதிர்காலம் விஞ்சும் . அதற்காக உயிர் விஞ்சி நின்றால் போதும் என்கிற அற்ப மனநிறைவு அடைவதுகூடக் கட்டமைக்கப்பட்ட அடிமைப் பண்பாடாக வெளிப்படுகிறது .

உணவுப்பண்பாடு

உணவு உண்ணும் முறை பண்பாட்டு உணர்வாக மதிக்கப்படுகிறது . சில சாதிகளில் மாட்டு இறைச்சி உண்ணும் வழக்கம் உடையவர்கள் . சில சாதிகள் அல்லது பல சாதிகள் அறவே மாட்டுக்கறி உண்ணும் வழக்கம் அற்றவர்கள் . மேலைநாட்டுத் தட்பவெப்பத்திற்கு ஏற்ப அங்குப் பாகுபாடுகள் ஏதுமின்றி மாட்டிறைச்சி உண்கின்றனர் . ஆனால் இங்கு மாட்டிறைச்சி உண்ணும் தலித் மக்களை இழிவாகக் கருதும்போக்கு உள்ளது . இது குறித்துத் தெளிந்த பண்பாட்டு அரசியலைத் தந்தை பெரியார் முன்வைக்கிறார் . " செத்த மாடு தின்பது உயிருள்ள ஐந்துவை உயிருடன் வதைத்து கொலை செய்து சாப்பிடுவதைவிட உயிரற்ற செத்துப்போன பிராணியின் மாமிசத்தை மண்ணில் பதைப்பதை வயிற்றுக்கில்லாத கொடுமையால் சாப்பிடுவது எப்படி அதிக பாவமாகும் . மாடு அறுப்பது பாவம் என்றால் ஆடு , கோழி அறுப்பதும் பாவம்தான் . மனித பிணத்தைக் கூட வைத்திய சாலைகளில் அறுக்கிறார்கள் . அவரைப் பஞ்சமரென்று சொல்கிறோமா ? " என்று கேள்வி எழுப்புகிறார் தந்தை பெரியார் . கடுமையான உழைக்கும் மக்கள்தான் மாட்டிறைச்சி உண்கிறார்கள் . இறைச்சி உண்ணல் முறையைப் பெரியாரின் நோக்கில் சிந்தித்தால்

குறைந்த விலை இறைச்சியை யாரும் தின்னவராத இறைச்சியை உண்ணும் பழக்கம் உடையவர்களாக இருக்கிறார்கள் . மாட்டிறைச்சி உண்பதற்கும் சுதந்திரத்திற்கம் தொடர்புகள் ஏதுமில்லை . மாட்டிறைச்சி உண்பதற்கும் பொருளாதார நிலையும் காரணமாக இருக்கிறது என்பதையே பெரியாரின் கருத்துக்கள் காட்டுகிறது .

*" ஏழைபாழைங்க கறி துன்னக்கூடாது*

*அதான் கேரளாவுக்கு மாடு ஏத்துன*

*லாரியை புடிக்கிறார்களா ?*

*பின்ன ..... அங்க பெரும்பாலும்*

*2*

*பாயுங்கதான் கறி துன்றாங்க*

*பறையனுவோ பள்ளனுவோன்று*

*இல்லாதவன்தான் இங்க கறி துன்றான் " "*

பொதுச்சமூகம் ஒடுக்கப்பட்ட மக்கள் மாட்டிறைச்சி உண்ணத் தடைவிதிப்பது போல மாடுகளைக் கேரளாவுக்கு அனுப்புகின்றனர் . அதற்குத் தடை விதிப்பதில்லை என்கிற வருத்தமும் கவிதைகளில் வெளிப்படுகிறது . பசுவதைத் தடுப்புச் சட்டம் தலித் மக்களின் உணவு முறைக்கு எதிராகவே கொண்டுவரப்பட்டது என்று படைப்புகள் வெளிப்படுத்துகின்றன . மாட்டுக்கறி என்ற தலைப்பில் பெரியாரின் நோக்கில் கேள்வி எழுப்புகிறார் . மாட்டுக்கறிக்குத் தடையென்று வருமென்றால் மக்களைத் திரட்டி ஒன்றிணைவோம் என்ற எழுச்சி உணர்வு அன்பாதவன் கவிதையில் பதிவாகியிருக்கிறது .

பொதுப்பண்பாட்டுப் போக்கும் மாட்டுக்கறியும்

மக்கள் இன்றைய காலக்கட்டத்தில் மாட்டிறைச்சி , பன்றி இறைச்சி போன்றவைகளை உண்ணத் தொடங்கி உள்ளனர் . அயல்நாடுகளுக்குச் சென்று அங்குள்ள நடைமுறை உணர்வை கமுக்கமாக இங்கும் நடைமுறைப்படுத்திக் கொள்கின்றனர் . கோவேத சுவாமிநாதன் ' ஆடும் பெரிய ஆடும் ' நூலில் மேட்டிமைச் சமூக மக்கள் கமுக்கமாக இறைச்சியை விரும்பி உண்ணுவதை நையாண்டி செய்கிறார் . மாடுதின்ன மாட்டார்கள் அவர்கள் ஆதிக்கச் சாதிக்காரர்கள் “ மருந்திற்கென்று காக்காய் தின்பார்கள் . இழுவைக்கென்று மந்தியைத் தின்பார்கள் . பிணம் தின்னும் நரியைத் தின்பார்கள் , உடும்பு என்னும் பல்லியைத் தின்பார்கள் . மலத்தைத் தின்று வாழும் பன்றியைத் தின்பார்கள் , நாய்க்கு என்று சொல்லி மாடு வாங்கி ரகசியமாய்த் தின்பார்கள் " கோவேத சாமிநாதன் மேட்டிமைச் சமூகத்தின் அசுத்தப்போக்கை வருணனை செய்து இதைவிட நன்றாகத்தான் இருக்கிறான் தாழ்த்தப்பட்டவன் . நீங்கள்தான் இப்பொழுது தூய்மையற்று இருக்கிறீர்கள் என்று கூறி எதிர்த்தீண்டாமை பேசி விடுதலை உணர்வைத் தூண்டுகிற விதத்தில் எழுதிச்செல்கிறார் .

“ ஒவ்வொரு பண்பாடும் ஒரு குறிப்பிட்ட விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது . சில பண்பாடுகள் தூய்மைக்க முதலிடம் தருகிறது . சில பண்பாடுகள் நேர்மை , அமைதி , சமத்துவம் , தற்சார்புடைமை , கடவுள் வழிபாடு போன்ற விழுமியங்களுள் ஏதேனும் ஒன்றுக்கு முக்கியத்துவம் தருகின்றன ” என்றுகூறும் , மானுடவியல் பண்பாட்டு ஆய்வாளர் பக்தவச்சல பாரதியின் கூற்றை ஆராய்ந்தால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சிதைந்து கிடக்கும் தலித் மக்களின் வாழ்வை பதிவு செய்யும்போது புலப்படும் இழிவு , அசுத்தமான , இயலாத அறிவற்ற , போக்குகள் இலக்கியத்தில் பின்னப்பட்டிருப்பது " தன் சமூகத்தை இழிவுப்படுத்துவது நோக்கமாக அல்லாமல் தன் சமூகத்திற்கு எதிரிகளை இனங்கான வைப்பவை என்ற விழி.பா. இதய வேந்தன் கூறுகிறார் ” . பண்பாட்டுக் கூறுகளே விடுதலையின் நோக்கமாக விளங்குவது கவனிக்கத் தக்கதாக உள்ளது .

ஆன்மீகப் பண்பாடு

ஆன்மீகப் பண்பாடு என்னும் சொல் பரவலாகப் பேசப்படுகிறது . இந்தப் பண்பாட்டைப் பேரிலக்கியங்களே கட்டமைத்து வெளிப்படுத்துகின்றன . இறைவன் , மனிதப்படைப்பு , உலக நியதி குறித்தும் ஆன்மா , கருமவினை குறித்தும் ஆன்மீகமாகப் பேசப்படுகிறது . நல்லது செய்தால் நல்ல வாழ்வு அமையும் . கெட்டது செய்தால் கெட்ட வாழ்வு அமையும் என்பது தெளிவான ஆன்மீகப் பண்பாடாக உள்ளது . " நல்ல வினைகளுக்கு இன்பக் கலப்புடைய பிறப்பும் தீவினைகளுக்குத் துன்பமான பிறப்பும் அமையவேண்டும் என்பதே நடுவுநிலைமையான தீர்ப்பு , அதுவே நியதி , அதுவே சட்டம் . அதுவே இறைமையின் நீதி அதுவே விதி , அதுவே இளமையின் நீதி , அதையே விதி எனக் கூறுகிறேன் " என்று சைவசித்தாந்த நோக்கில் ஆன்மீகப் பண்பாட்டிற்கு விளக்கம் தருகிறார் அ.சொ. சுப்பையா தலித்தியக் கவிதைகள் கடவுள் பற்றியோ மறுபிறப்பு பற்றியோ கவலைப்படுவதில்லை . நிகழ்கால வாழ்வின் இன்பத்தைத் துய்த்தால் போதும் என்ற அளவில் மனநிலை உள்ளது . வாழ்க்கைக்கு மாற்றம் ஏற்படுத்தப் போராட்டங்களும் அரசியல் எதிர் வினைகளும் ஏற்படுத்தவேண்டும் என்கிற வேட்கை கவிதைகளில் ஒலிக்கிறது . பொருளாதார மேன்மைக்கும் , கல்வி மேன்மைக்கும் சமூக மறுமலர்ச்சிக்கும் போராட்டத்தின் மூலமும் அரசியல் எதிர்வினை மூலமும் செயல்பாடுகளின் மூலமும் மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்கிற நோக்கில் பெரும்பான்மையின் கவிதைகளும் பேசுகின்றன . என்.டி.ராஜ்குமார் , பேய் , பிசாசு , மாந்திரீகம் எனப் பேசிச் சமூக அவலங்களுக்கு எதிராக மூடநம்பிக்கையையும் வாழ்வியலாகக் கொண்ட மாந்திரீகப் பண்பாட்டை விடுதலைக் கருவியாக பயன்படுத்துகிறார் . தமிழ்க் கவிதைகளில் பயன்படுத்தாத சொற்களும் கருத்துக்களும் என்.டி.ராஜ்குமார் , கவிதைகளில் இடம்பெறுகின்றன .

முடிவுரை

பண்பாடு ஒவ்வொரு சமூகத்திற்கும் தனித்தனியாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறது . இதன் அடிப்படையில் இந்த சமூகம் பயணப்பட்டு கொண்டிருக்கின்றன .

அடிக்குறிப்புகள்

*1. பக்தவச்சலபாரதி , பண்பாட்டு மானுடவியல் , மெய்யப்பன் பதிப்பகம் , சிதம்பரம் -1 , 2003 , ப .159 .*

*2. வே.ஆனைமுத்து ( பதி . ) , தந்தை பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் , பாகம் -1 , பகுதி -3 , சென்னை -5 , 2009 , ப .261 .*

*3. அன்பாதவன் , நெருப்பில் காய்ச்சிய பறை , காவ்யா பதிப்பகம் , சென்னை -24 , ப .76 .*

*4. கோவேத சுவாமிநாதன் , ஆடும் பெரிய ஆடும் , பாலம் பதிப்பகம் , சென்னை , 1.54 .*

*5. பக்தவச்சல பாரதி , பண்பாட்டு மானுடவியல் , மெய்யப்பன் பதிப்பகம் , சிதம்பரம் , 2003 , பக்.159-160 .*

*6. அ.சொ. சுப்பையா , விதியை மதியால் வெல்லலாம் . ப .39 .*